DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No.139 /2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 21th day of July 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 1** | கிராமம் | : | சூரங்கோட்டை |
| பெயர் | : | ரெத்தினம் | தாலுகா | : | இராமநாதபுரம் |
| க/ பெ. | : | முத்தையா | சமயம் | : | இந்து |
| வயது | : | 68 | ஜாதி | : | அகமுடையார் |
| தொழில் | : | இல்லத்தரசி | | | |

<u>நாள்: 21.07.2023</u>

<u>நேரம்: 03.00 பி.ப.</u>

1,2 எதிரிகள் ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

<u>**முதல் விசாரணை:**</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. 2, 3 வருடங்களுக்கு முன்பு நான் வீட்டில் இருந்தபோது, எனது வீட்டில் நான் இருந்தபோது அடையாளம் தெரிந்த சிலர் மகளின் கடைக்கு வந்தார்கள். அப்போது அருகில் இருந்த பாட்டில் தவறுதலாக கீழே விழுந்து உடைந்துவிட்டது. அதை எடுக்க செல்லும்போது எனது பேரனுக்கு காயம் ஏற்பட்டது. அதன்பிறகு சந்தேகத்தின் பேரில் பாட்டில் யாரோ உடைத்து விட்டார்கள் என்று காவல் நிலையத்தில் சொன்னோம். அவர் என்னிடம் ஒரு தட்டச்சு செய்யப்பட்ட தாளில் கையெழுத்து வாங்கினார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது மகள் தட்டச்சு செய்து கொடுத்தார். தற்போது நாங்களும் எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆகும். வழக்கு பற்றி வேறு எதுவும் எனக்.கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

<u>அரசுதரப்பு கு.வி.</u>

எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்த சமரச மனுவில் உள்ள புகார்தாரர் கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். கடந்த 28.02.2020ம் தேதி இரவு 8.00 மணியளவில், எங்கள் கடை அருகில் குடிஇருக்கும் தேவி என்பவரின் வீட்டில் நிச்சயதார்த்தம் நிகழ்ச்சியில் அப்போது அந்நிகழ்ச்சிக்கு வந்த எதிரிகள் இருவரும் எங்கள் கடை அருகில் மது அருந்தி கொண்டிருந்தார்கள் என்றும், இதைபார்த்த எனது பேரனும் அக்கம் பக்கத்தினரும் சத்தம போட்டார்கள் என்றால் சரியல்ல. அப்போது வாக்குவாதம் ஏற்பட்டது என்றாலும் போலீசுக்கு தகவல் கொடுத்து போலீசார் வந்தார்களா என்றாலும் சரியல்ல. கடந்த 29.08.2020 மாலை 4 மணியளவில் 1, 2 எதிரிகள் தங்கள் இருசக்கர வாகனத்தில் கத்தி கம்பு அருவாளுடன் எனது கடைக்கு வந்து என்னை பார்த்து அசிங்கமாக பேசி எதிரிகள் இருவரும் என்னை அடித்தார்களா என்றால் சரியல்ல. எதிரிகள் சேர்ந்து கடையில் வைத்திருந்த சோடா பாட்டில் மற்றும் பொருட்களை அடித்து உடைத்து ரூ.1000/- மதிப்பில் சேதப்படுத்தினார்களா என்றாலும் சரியல்ல. சம்பவத்தை கேள்விபட்டு வந்த எனது பேரனை எதிரிகள் அடித்து காயப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. பின்பு தனபால், வெற்றிசெல்வன் மற்றும் அக்கம்பக்கத்தினர் சண்டையை விலக்கிவிட்டாகள் என்றாலும் எதிரிகள் செல்லும்போது என்னையும் எனது பேரனையும் கொலை மிரட்டல் விடுத்து சென்றார்கள் என்றாலும் சரியல்ல. இச்சம்பவத்திற்காக மறுநாள் பஜார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், அதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்ததாகவும், போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டுதற்போது எதிரிகள் தெரிந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக வழக்கை வாபஸ் வாங்குகிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு கு.வி –இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.07.21 16:51:21 +0530

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No.139 /2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 21[th] day of July 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 2** | கிராமம் | : | சூரங்கோட்டை |
| பெயர் | : | வாசுகபில் | தாலுகா | : | இராமநாதபுரம் |
| த/ பெ. | : | முருகன் | சமயம் | : | இந்து |
| வயது | : | 25 | ஜாதி | : | அகமுடையார் |
| தொழில் | : | கடை | | | |

<u>நாள்: 21.07.2023</u>

<u>நேரம்: 03.10 பி.ப.</u>

1,2 எதிரிகள் ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

<u>**முதல் விசாரணை:**</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. அ.சா.1 எனது அம்மாச்சி. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

<u>**அரசுதரப்பு கு.வி.**</u>

கடந்த 28.02.2020ம் தேதி இரவு 8.00 மணியளவில், எங்கள் கடை அருகில் குடிஇருக்கும் தேவி என்பவரின் வீட்டில் நிச்சயதார்த்தம் நிகழ்ச்சியில் அப்போது அந்நிகழ்ச்சிக்கு வந்த எதிரிகள் இருவரும் எங்கள் கடை அருகில் மது அருந்தி

கொண்டிருந்தார்கள் என்றும், இதைபார்த்த நானும், அக்கம் பக்கத்தினரும் சத்தம போட்டோம் என்றால் சரியல்ல. அப்போது வாக்குவாதம் ஏற்பட்டது என்றாலும் போலீசுக்கு தகவல் கொடுத்து போலீசார் வந்தார்களா என்றாலும் சரியல்ல. கடந்த 29.08.2020 மாலை 4 மணியளவில் 1, 2 எதிரிகள் தங்கள் இருசக்கர வாகனத்தில் கத்தி கம்பு அருவாளுடன் எங்கள் கடைக்கு வந்து எனது அம்மாச்சி அ.சா.1றை அசிங்கமாக பேசி எதிரிகள் இருவரும் அம்மாச்சியை அடித்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் சேர்ந்து கடையில் வைத்திருந்த சோடா பாட்டில் மற்றும் பொருட்களை அடித்து உடைத்து ரூ.1000/– மதிப்பில் சேதப்படுத்தினார்கள் என்றாலும் சரியல்ல. சம்பவத்தை கேள்விபட்டு வந்த என்னையும் எதிரிகள் அடித்து காயப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. பின்பு தனபால், வெற்றிசெல்வன் மற்றும் அக்கம்பக்கத்தினர் சண்டையை விலக்கிவிட்டாகள் என்றாலும் சரியல்ல. எதிரிகள் செல்லும்போது என்னையும் எனது அம்மாச்சியையும் கொலை மிரட்டல் விடுத்து சென்றார்கள் என்றாலும் சரியல்ல. இச்சம்பவத்திற்காக மறுநாள் பஜார் காவல் நிலையத்தில் எனது அம்மாச்சி புகார் கொடுத்ததாகவும், அதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்ததாகவும், போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் தெரிந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு கு.வி –இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.07.21 16:51:28 +0530

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No.139 /2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 21th day of July 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 3** | கிராமம் | : | சூரங்கோட்டை |
| பெயர் | : | சத்தியேந்திரன் | தாலுகா | : | இராமநாதபுரம் |
| த/ பெ. | : | பாலு | சமயம் | : | இந்து |
| வயது | : | 44 | ஜாதி | : | அகமுடையார் |
| தொழில் | : | கூலி வேலை | | | |

<u>நாள்: 21.07.2023</u>
<u>நேரம்: 03.15 பி.ப.</u>

1,2 எதிரிகள் ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

<u>**முதல் விசாரணை:**</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். 2, 3 வருடங்களுக்கு முன்பு நான் வீட்டில் இருந்தபோது போலீசார் சம்பவநடந்ததாக சொல்லி என்னிடம் வெள்ளைபேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். என்னுடன் சுதாகர் என்பவரும் கையெழுத்து போட்டார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரி உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆகும். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**<u>அரசுதரப்பு கு.வி.</u>**

கடந்த 30.08.2020ம் பகல் 1.30 மணியைபோல போலீசார் வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், சுதாகர் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. போலீஸ் விசாரணை செய்தபோது போலீஸ் விசாரணையில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு கு.வி –இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.07.21 16:51:34 +0530